**<u>நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,</u>**
**<u>சென்னை–5.</u>**

## <u>சுற்றறிக்கை</u>

**<u>ந.க. எண் : 33584/07/ப்பி3</u>** **<u>நாள். 06.11. 2009.</u>**

பொருள்:- பகுதி II திட்டம் – 2006–07 மற்றும் 2007–08 – நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்க மான்யம் வழங்கப்பட்டது - நவீன இறைச்சிக் கூடங்கள் - கட்டி முடிக்கப்பட்டுள்ளது - பயன்பாட்டுக்கு கொண்டு வருவது - பற்றி .

பார்வை:– அரசு ஆணை (நிலை) எண்.72 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் (எம்.ஏ.4) வழங்கல் துறை நாள். 25.5.07.

*******

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பொதுமக்களுக்கு சுகாதாரமான முறையில் அறுக்கப்பட்ட இறைச்சி வழங்கப்படுவதற்கும், பொது இடங்களில் இறைச்சிக்காக விலங்குகள் கொடூரமான முறையில் கொல்லப்படுவதை தடைசெய்தும் 2000–ஆம் ஆண்டில் இந்திய தலைமை நீதிமன்றம் ஆணைகள் வழங்கியுள்ளது. விலங்குகளுக்கு எதிரான கொடுஞ்செயல்களுக்கு எதிராக 2001–ல் சட்ட விதிகளும் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

2. இவற்றினைப் பின்பற்றி நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் திட்டம் அரசு பகுதி II திட்டத்தின் கீழ் 50% மான்யம் வழங்கி செயல்படுத்தப்பட்டுள்ளது. 2006–07–ஆம் ஆண்டில் 32 நகராட்சிகளிலும் 5 மாநகராட்சிகளிலும் ரூ.740/– இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. அதைப் போலவே 2007–08–ஆம் ஆண்டில் 65 நகராட்சிகளில் ரூ.1300/– இலட்சம் மதிப்பீட்டில் நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணிகள் எடுக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் முடிவுற்று விட்டன.

3. எனினும் நவீன இறைச்சிக் கூடங்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது பற்றி நகராட்சி / மாநகராட்சிகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதில் நவீன இறைச்சிக் கூடங்கள் முழுமையான அளவில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை என்பது அறியப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட அனைத்து இறைச்சிக் கூடங்களும் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 1 | நகராட்சி/மாநகராட்சி இறைச்சிக்கூட ‘சீல்‘ இல்லாது விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும் இறைச்சி உடனுக்குடன் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட வேண்டும். |
| 2 | இறைச்சிக்கூடத்தில் தேவையான நீர்வசதி எப்போதும் இருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். |

| | |
|---|---|
| 3 | இறைச்சிக் கூடத்தில் இருந்து விற்பனைக்கு எடுத்துச் செல்லும் இறைச்சி 'மூடிய' வாகனங்கள் (அ) ( container ) மூலம் தான் எடுத்துச் செல்லப்பட வேண்டும். |
| 4 | அனுமதியற்ற இடங்களில் விற்பனை செய்யப்படும் இறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட வேண்டும். அத்துடன் அவ்வாறு விற்பனை செய்வோருக்கு அபராதமும் விதிக்கப்படும். |
| 5 | இறைச்சிக் கூடக் கட்டிடங்கள் ஆண்டுதோறும் பராமரிப்புப் பணிகள், வர்ணயம் பூசும் பணிகள் செய்யப்பட வேண்டும். |
| 6 | வெட்டும் கருவிகள் துருப்பிடித்தவையாக இருப்பின் அனுமதிக்கலாகாது? |
| 7 | இறைச்சிக் கூடத்தில் நேரடி விற்பனை அனுமதிக்கக் கூடாது. |
| 8 | 16 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இறைச்சிக் கூடத்தில் அனுமதிக்கலாகாது. |
| 9 | சில நகராட்சிகளில் இன்னும் பொதுஇடங்களில் இறைச்சிக்காக விலங்குகள் அறுக்கப்படும் நிகழ்வுகள் காணப்பட்டது. இது இந்திய தலைமை நீதி மன்றத்தின் ஆணைகளுக்கும் மற்றும் விலங்குகள் வதைச்சட்டம் ( Cruelty against Animals Act )சட்ட விதிகளுக்கும் முரணானதாகும். இதனால் சுற்றுச் சூழல் மாசு மற்றும் பொது சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் எழுவதால் இதனை ஆணையர்கள் முற்றிலுமாக தடைசெய்ய வேண்டும். |
| 10 | விலங்குகள் அறுப்பதற்கு முன் கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்குட்படுத்த வேண்டும். |
| 11 | நவீன இறைச்சிக் கூடங்களின் பராமரிப்பில் பல குறைபாடுகள் தெரியவந்துள்ளன. இறைச்சி அறுக்கப்படும் இடம், விலங்குகளை அடைத்துவைக்கும் கொட்டடி போன்றவை சுகாதாரமாக பராமரிக்கப்பட வேண்டும். |
| 12 | இறைச்சி கூடங்கள் " Pressure pump" மூலமாக சுத்தமாக கழுவி விடப்பட வேண்டும். |
| 13 | இறைச்சிக் கழிவுகளை சுகாதாரமான முறையில் மாசுக்கட்டுப்பாடு விதிகளின்படி "treat" செய்து அகற்ற வேண்டும். |
| 14 | இறைச்சியினை திறந்த நிலையில் வாகனங்களின் மூலம் எடுத்துச் செல்வதை தடைசெய்து மூடிய வாகனங்களில் எடுத்துச் செல்வதை உறுதி செய்ய வேண்டும். |
| 15 | நவீன இறைச்சிக் கூடங்களை குத்தகைக்கு விடும் போது குத்தகை விதிகளில் இவ்வலுவலகத்திலிருந்து ஏற்கனவே வழங்கப்பட்ட மாதிரி துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை தவறாமல் சேர்த்து அந்நிபந்தனைகளின்படி குத்தகைதாரர்கள் நவீன இறைச்சிக் கூடங்களை பராமரிப்பதை அவ்வப்போது ஆய்வு செய்து உறுதி செய்ய வேண்டும். |

| | |
|---|---|
| 16 | நவீன இறைச்சிக் கூடங்கள் அமைக்கும் பணி முடிவுற்ற அனைத்து நகராட்சிகளிலும் ஆடு வதை செய்வது இறைச்சிக் கூடங்களில் தான் நடைபெற வேண்டும். இதனை ஆணையர், நகர்நல அலுவலர், சுகாதார ஆய்வாளர்கள், தொடர்ந்து ஆய்வுகளின் மூலம் கண்காணிக்க வேண்டும். |
| 17 | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட நகராட்சிகளுக்கு ஆய்வுக்கு செல்லும்போது இறைச்சிக் கூடங்களை பார்வையிட்டு அவை முறையாக பராமரிக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வறிக்கையில் குறிப்பிட்டு தங்கள் நாட்குறிப்புடன் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. |

ஒம்/- ப.செந்தில்குமார்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

<u>பெறுநர்:-</u>

அனைத்து மாநகராட்சி ஆணையர்கள்,
அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் செயல்அலுவலர்கள்,
அனைத்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்கள்.

நகல்
நகராட்சி நிர்வாக இயக்குநர் மேஜைக்கு
அனைத்து அலுவலர்கள், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்
தமிழ்நாடு நகரவியல் பயிற்சி நிலையம், கோயம்புத்தூர்
நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக இணையதளம் (ITS)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

தே.நி.கண்காணிப்பாளர்.